நாள்: 12.03.2025

MCOP.76/2021
பெயர் அய்யனார்
ம.சா.1

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டினேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் தற்சமயம் இல்லை. ஆனால் எடுத்திருந்தேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது. விபத்து நடந்த இடம் சீலையம்பட்டியிலிருந்து சின்னமனூர் வரும்போது இருந்த வளைவான பாலம் என்றால் சரிதான். விபத்து சமயம் நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன். விபத்தை ஏற்படுத்திய வாகனம் எனக்கு எதிர்திசையில் தான் வந்தது. விபத்து நடந்த சாலை இரண்டு கனரக வாகனங்கள் ஒரே சமயத்தில் செல்லக்கூடிய அகலமான சாலை என்றால் சரிதான். விபத்து தென்வடல் ரோட்டில் மேற்குப்பக்கம் நடந்தது என்றால் சரியல்ல. கிழக்குப்பக்கம் நடந்தது. என்னுடைய வாகனத்திற்கு முன்னரோ என்னை இடித்த வாகனத்திற்கு முன்னரோ எதாவது வாகனம் சென்றதா என்றால் இல்லை. நான் தான் ரோட்டின் நடுவில் சென்று மேற்கு ஓரம் சென்றுவிட்டேன் என்றும், விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்து இடது ஓரமாகத்தான் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு தகுதிச்சான்று ஊர்ஜிதத்தில் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 ஆவணத்தில் தகுதிச்சான்று இல்லை என்பது தெளிவாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரை என் மகன் பாலமுருகன் கொடுத்தார். விபத்து சமயத்தில் என் மகன் அங்கு இல்லை. விபத்தை நேரடியாக பார்த்த சாட்சிகளை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வலது கையில் ஏற்பட்ட காயம் தான் கொடுங்காயம். மற்ற காயங்கள் சிறு காயம் தான். விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு 53 வயது என்றால் சரிதான். கூலி வேலை செய்து தினமும் 500 ரூபாய் சம்பாதித்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு நான் தான் உரிமையாளர். என்னுடைய காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் அ திவேகமாக ஓட்டி

வந்து விபத்தை ஏற்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. என் மீது மோதிய வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லை என்பதால் அது காப்பீட்டு விதிமீறல் என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நன் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை மிக அதிகப்படியானது என்றால் சரியல்ல.